Registered as a NewsPaper

# ஈழநாதம்

Eelanatham மக்கள் நாளிதழ்

பக்கங்கள் ~ iv

வவுனியா ஒப்டிக்கல்
Vavuniya Optical
கண் பரிசோதிக்கப்பட்டு மூக்குக் கண்ணாடி 1/2 மணித்தியாலத்தில் பெற்றுக் கொள்ளலாம். உங்கள் வைத்திய துண்டுகளுக்கும் உடன் கண்ணாடி வழங்கப்படும்.
வவுனியா ஒப்டிக்கல்,
30 பஸ் நிலையம்,
வவுனியா. (சீ-7864)

நாதம் 14 திருவள்ளுவர் ஆண்டு 2034 வைகாசி - 09 23-05-2003 வெள்ளிக்கிழமை ஓசை 94

## இணக்கப்பாட்டையும், தீர்வையும் ஏற்படுத்த

# சிறிலங்கா அரசியல் யாப்புக்கு வெளியில்

# ஓர் இடைக்கால ஏற்பாட்டை உருவாக்குதல் அவசியம்

## அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்



(கிளிநொச்சி)

**தமிழ் மக்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும், தமிழ் மக்களின் பங்களிப்பும் இணக்கப்பாடும் இல்லாமலும் உருவாக்கப்பட்டது தான் இலங்கையின் அரசியலமைப்பு. இந்த அரசியலமைப்பு தமிழ் மக்கள் மத்தியில் ஏற்படுத்திய வெறுப்புக் காரணமாகவே தமிழ் மக்கள் இதனை ஆதரிக்கவில்லை. ஆகவே நாங்கள் இணக்கப்பாட்டையும் தீர்வையும் ஏற்படுத்திக் கொள்வதற்கு இந்த அரசியல் அமைப்புக்கு வெளியால் ஒரு இடைக்கால ஏற்பாட்டை ஏற்படுத்திக் கொள்வது என்பது அவசியமானது, யதார்த்தபூர்வமானது. இவ்வாறு அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் தெரிவித்தார்.**

நேற்று கிளிநொச்சியில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். செய்தியாளர்களின் கேள்விகளுக்கு அவர் பதிலளித்த போது,

கேள்வி: இடைக்கால அலகைக் கேட்பது ஜப்பானில் நடைபெறவுள்ள உதவி வழங்கும் மாநாட்டில் கலந்து கொள்ளவில்லை என்ற ஊகத்தைத் தானே வெளிப்படுத்துகிறது? (iv ஆம் பக்கம் பார்க்க)

## ஜப்பான் மாநாட்டில் நாம் கலந்து கொள்வதற்கா அங்கீகாரமும் சூழ்நிலையும் ஏற்படுத்தப்பட வேண்டும்

### அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு

(அலுவலக செய்தியாளர்)

யுத்தத்தால் சிதைந்து போயுள்ள வடக்கு கிழக்குப் பிரதேசங்களை மீளக் கட்டி எழுப்புவதற்கும் மக்களின் வாழ்நிலையைச் சீர்படுத்துவதற்கும் சர்வதேச சமூகம் செய்கின்ற உதவிகளைச் சரியான முறையில் எமது மக்களுக்குக் கொண்டு செல்லக்கூடியதும், தன்னிச்சையாக முடிவெடுத்து நடைமுறைப்படுத்தும் அதிகாரமுள்ளதுமான ஒரு இடைக்கால நிர்வாகத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணப்பாடு எமது மக்கள் மத்தியில் உள்ளது என தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் உரையாற்றுகையில் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது தலைமைப்பீடம் எடுத்திருந்த தீர்மானங்கள் தொடர்பாக ஏற்கனவே ஊடகங்களில் தெளிவாக வந்திருக்கின்ற சூழ்நிலையில் எம்மால் ஏற்கனவே ஒழுங்கு படுத்தப்பட்ட இந்தச்சந்திப்பில் எம்மால் நேற்று வெளியிடப்பட்ட எமது நிலைப்பாடுகள் தொடர்பான விரிவான விளக்கங்களை அளிப்பதற் (iv ஆம் பக்கம் பார்க்க)

## வெள்ளப்பெருக்கினால் பாதிக்கப்பட்ட

# மக்களுக்கான உதவிப்பொருட்கள் நேற்று கையளிக்கப்பட்டன

தென்னிலங்கையில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான மனிதாபிமான உதவியாக விடுதலைப் புலிகள் உலர் உணவுப் பொருட்களை நேற்று வழங்கியுள்ளனர்.

ஆறு பாரஊர்திகளில் எடுத்துச் செல்லப்பட்ட மேற்படி உணவுப் பொருட்களை மலையக மக்கள் முன்னணித் தலைவரும் அமைச்சருமான சந்திரசேகரனிடம் ஒப்படைத்தனர். இவ் ஒப்படைப்பு நிகழ்வில் வவுனியா மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் எழிலனும் அரசியல் துறையைச் சேர்ந்த அன்பரசனும் கலந்துகொண்டனர்.

## நிந்தவூரில் புலிகள் உறுப்பினர் ஈ.பி.டி.பி.யினரால் படுகொலை

### தமிழ் விரோதக் கும்பலின் அடாவடி என புலிகள் கண்டனம்

அம்பாறை நிந்தவூர் பகுதியில் விடுதலைப் புலிகள் உறுப்பினர் ஈ.பி.டி.பி. யினரால் கொலை செய்யப்பட்டுள்ளார்.

அம்பாறை நிந்தவூர் 25ஆம் வட்டாரம் வளைஞ்ச வெட்டை வயல் பிரதேசத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் உறுப்பினரின் உடல் மீட்கப்பட்டுள்ளது.

இவரின் தலை, வயிறு, கால்கள் என்பவற்றில் துப்பாக்கிச் சூட்டுக்காயங்கள் காணப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

கொல்லப்பட்டவர் பூவண்ணன் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனைக் கண்டித்து நாட்டில் தற்போது தோன்றியுள்ள அமைதிச் சூழலைச் சீர்குலைத்து மீண்டும் ஓர் யுத்தத்தை ஏற்படுத்தி சுயலாபம் தேட முனையும் தீயசக்திகள் தற்போது தமது அடாவடித்தனங்களைக் காட்டி வருகின்றன என விடுதலைப் புலிகளின் மட்டு. அம்பாறை அரசியல்துறை அறிக்கை ஒன்றை வெளியிட் டுள்ளது.

அதில் கடந்தகால யுத்தத்தினால் சுயலாபம் அடைந்த தமிழ் விரோதக் கும்பல்களின் அடா (iv ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு - கிழக்கு மாகாணங்களில்

# உள்ளூராட்சித் தேர்தலை பிற்போடும் எண்ணமில்லை

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை பிற்போடும் எண்ணம் அரசாங்கத்துக்கு இல்லை என்று சிறிலங்காவின் நீதி, சட்ட மறுசீரமைப்பு அமைச்சர் லொக்கு பண்டார தெரிவித்துள்ளார்.

சிறிலங்காவின் பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை, வடக்கு-கிழக்கு மாகாணங்களில் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்களை நடத்துவதற்கும், புதிய நியமனப் பத்திரங்களைக் கோருவதற்கும் ஏற்பாடு செய்யும் சட்டமூலம் ஒன்றை உள்நாட்டு அலுவல்கள் மாகாண உள்ளூராட்சி அமைச்சர் அலித்அலுவிகார தெரிவித்துள்ளார்.

இதேவேளை வடக்கு-கிழக்கு மாகாணங்களுக்கான உள்ளூராட்சிச் சபைகளுக்கானத் தேர்தல் எதிர்பாரா (iv ஆம் பக்கம் பார்க்க)

## ஐரோ. ஆணைக்குழு பொறுப்பதிகாரி இன்று யாழ்ப்பாணம் செல்கிறார்

(யாழ்ப்பாணம்)

இலங்கைக்கான ஐரோப்பிய ஆணைக்குழுவின் தூதுக்குழுவிற்குரிய பொறுப்பதிகாரி இன்று யாழ்ப்பாணம் செல்லவுள்ளார்.

ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் மாநாட்டுக்கு முன்னதாக யாழ்ப்பாணத்தின் தற்போதைய நிலவரங்களை மதிப்பீடு செய்வதே அவரது விஜயத்தின் நோக்கம் என்று கூறப்படுகிறது.

யாழ். இல் இரு நாட்கள் தங்கியிருக்கவுள்ள இவர் புனர்வாழ்வு மற்றும் மீள் குடியமர்வு நடவடிக்கைகள் தொடர்பான விவகாரங்கள் குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடனும் யாழ் ஆயர், மனித உரிமைகள் குழுக்கள், சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோருடனும் பேச்சுவார்த்தை (iv ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா.குழு வருகை

(கொழும்பு)

இலங்கையில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட 05 மாவட்டங்களுக்கு உணவு, தங்குமிட வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க ஐக்கிய நாடுகள் சபை தீர்மானித்துள்ளது.

இவ் உதவிகளை ஐக்கிய நாடுகள் சபை அதன் உலக உணவுத் திட்டம் யுனிசெவ் நிறுவனம், உலக சுகாதார ஸ்தாபனம் ஆகியவற்றின் மூலம் வழங்கவுள்ளது.

(iv ஆம் பக்கம் பார்க்க)

## தற்கொலைத் தாக்குதல்களைக் கட்டுப்படுத்த

# சிறிலங்காவின் ஆலோசனையை பிரித்தானியா கோருகிறது

தற்கொலைத் தாக்குதலைக் கட்டுப்படுத்துவது குறித்து பிரித்தானியப் பொலிசார் சிறிலங்காப் பொலிசாரின் உதவியை நாடவுள்ளனர்.

இலங்கை மற்றும் இஸ்ரேலியப் பகுதிகளில் பெரும்பாலான தற்கொலைத் தாக்குதல்கள் இடம் பெற்றுள்ளன. இந்த தாக்குதல்களைத் தடுத்து நிறுத்துவது தொடர்பாக இரு நாட்டுப் பொலிசாருக்கும் அதிகளவு அனுபவம் உண்டு என்று பிரித்தானியா கருதுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையிலேயே பிரித்தானியாவின் தீவிரவாத நடவடிக்கைகளுக்கு எதிரான பொலிசார் இந்த இரு நாட்டுப் பொலிசாரிடமும் உதவியைக் கோரியுள்ளனர்.

# எமக்கு —
# மொழிபெயர்ப்பாளர் தேவை!
# அது நீங்களா...?

முழு சுயவிபரத்துடனும் எதிர்பார்க்கும் கொடுப்பனவுடனும் 5-6-2003 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும். கிளிநொச்சி - புதுக்குடியிருப்பில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது. விண்ணப்பங்களை

**அனுப்ப வேண்டிய முகவரி:**

விளம்பர இல.46,
மே/பா.ஈழநாதம்,
யாழ்.சாலை,
கிளிநொச்சி.

(3281)

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள YAMAHA NEWS MATE 50 மோட்டார் சைக்கிள் (நீல நிறம்) விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: தங்கமாளிகை, ஈழநாதம் பணிமனை அருகாமை, யாழ். சாலை, கிளிநொச்சி. (3280)

## விவசாயிகளே!

உங்கள் வீட்டுத்தோட்டத்தை வளமாக்கத்தேவையான தென்னை,பலா, மாதுளை, எலுமிச்சை (தேசி),கமுகு, கொய்யா, கொடித் தோடை, தோடை, சவுக்கு மற்றும்பல தரமான நல்லின நாற்றுக்களை குறைந்த விலையில் நீங்கள் பெறுவதற்கு இன்றே நாடுங்கள். ஒருங்கிணைந்த மாதிரிப் பண்ணை, வட்டக்கச்சி. (3256)

## காணவில்லை

15.05.2003 அன்றிலிருந்து Y.J. செங்காரி நிறம் (பசு), ம/ர வெள்ளை நிறம் (பசு), வெள்ளை நிறப்பசுக் கன்று ஆகியன காணாமல் போயுள்ளன. தகவல் அறிந்தவர்கள் பின்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். செ.அங்கையற் செல்வி,17/2, திருவையாறு, கிளிநொச்சி. (3272)

# சேரன் வாணிபம்
## பணிநிலை வெற்றிடம்

பணிநிலை : கடின உழைப்பு சிற்றூழியர்

தகைமை : அரிசி ஆலைப்பகுதி பணிகளில் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

சம்பளம் : நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். உணவு, தங்குமிடம் இலவசம்.

மேற்குறிப்பிடப்பட்ட பணிக்கு தகைமை உடையவர்கள் கீழ்க்குறிப்பிடப்படும் முகவரியில் 23.05.2003ஆம் நாள் தொடக்கம் 31.05.2003 ஆம் நாள் வரைக்கும் காலை 09 மணி தொடக்கம் மாலை 04 மணிவரை தொடர்பு கொள்ளலாம் என்பதனை அறியத்தருகின்றோம்.

குறிப்பு: அரிசி ஆலைப் பணிகளில் பயிற்சி பெற்று பணியாற்ற விரும்புவோர்களது விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு முழுமையான பயிற்சி வழங்கப்பட்ட பின்னர் பணி அமர்த்தம் வழங்கப்படும்.

நிர்வாகம்,
சேரன் பணிமனை,
கண்டி வீதி, கிளிநொச்சி.

(3278)

# உந்துருளி விற்பனைக்கு
## HERO HONDA (SPLENDER)

தமிழீழ வைப்பகத்தின் பயன்பாட்டிலுள்ள உந்துருளி விற்பனை செய்வதற்கு கேள்விப் படிவங்கள் கோரப்படுகின்றன. இதற்கான வேண்டுகைகள் உரிய கேள்விப் படிவங்களில் விலை விளக்கத்தைக் குறித்து 02.06.2003 ஆம் நாள் அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். உந்தூர்தியைப் பார்வையிடவும், மேலதிக விளக்கங்களைப் பெறவும், பணிநாட்களில் இல. 232, திருநகர், கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழீழ வைப்பக நடுவப்பணியகத்தில் காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

மேலாளர்,
ஆளுகைப் பகுதி,
நடுவப்பணியகம்,தமிழீழ வைப்பகம்.
(சி-8122)

# கிளி - மாவட்ட தொழில்நுட்பக்கல்லூரி
## தொழில்சார் பயிற்சி நெறிக்கான
# விண்ணப்பம் கோரல்

மீள் கட்டுமானப் பணிகளைத் துரிதப்படுத்தவும், இளைஞர், யுவதிகளுக்கான உடனடி வேலைவாய்ப்பைப் பெற்றுக் கொடுக்கும் பொருட்டும், பின்வரும் பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

1. **மேசன் பயிற்சி நெறி - 06 மாதம்**
2. **மரவேலைப் பயிற்சிநெறி - 06 மாதம்**

பூநகரி, கண்டாவளை, பளைப் பிரதேசங்களில் ஆரம்பிக்கப்படவுள்ள இப்பயிற்சி நெறிக்கு எழுத, வாசிக்கத் தெரிந்த ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். பயிற்சிக்காலத்தின் போது ஊக்குவிப்பு ,கொடுப்பனவு ரூபா இரண்டாயிரம் (2000/-) வழங்கப்படும். ஆர்வமுள்ளவர்கள் உரிய பிரதேச செயலகங்களில் பெயர் விபரங்களை 01-06-2003க்கு முன் பதிவு செய்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

வன்னேரிக்குளம் வீதி,
கிளிநொச்சி. (சி-7880)

அதிபர்,
தொழில்நுட்பக்கல்லூரி, ஆனைவிழுந்தான்.




# வன்னியன் தொலைத்தொடர்பு நிலையத்தின் வளர்ச்சியில்
# இன்னுமோர் உதயம்...

## இன்று முதல் முற்றிலுமாய்
## உங்களின் பணியில் இணைகின்றோம்.

**உறவுகளோடு உரையாடி உணர்வுகளைப் பகிர்ந்து கொள்ளவும்**
**தகவல்களை விரைந்து பரிமாறி நிறைவுகளைப் பெற்றிடவும்**

# வன்னியன் தொலைத்தொடர்பு நிலையம்

## உங்களது சேவைக்கான எங்களது கட்டணங்கள்

☎அமெரிக்கா, கனடா, ஐரோப்பிய நாடுகளுக்கான நேரடி அழைப்புகளுக்கு நிமிடம் ஒன்றிற்கு 35உரூபா/=
☎இணையத்தளத்தினூடே நிறைவாக உரையாடுவதற்கு நிமிடமொன்றிற்கு உரூபா18/=
☎உள்நாட்டு வெளிநாட்டு அழைப்புகளுக்கு நிமிடமொன்றிற்கு உரூபா 13.50/=
☎உள்வரும் அழைப்புக்கள் எல்லாவற்றிற்கும் நிமிடமொன்றிற்கு உரூபா5/=

**உலகத்திலுள்ள உங்கள் உறவுகளின் ஒலியை வன்னிக் கிராமங்களின் வாசலுக்கு எடுத்து வரும் பணியில்...**

**இது வரை நாம் கால் பதித்த இடங்கள்...**

☎யாழ்.சாலை,கிளிநொச்சி. ☎சந்தையருகாமை,வட்டக்கச்சி. ☎நெடுங்கேணி சந்தி, நெடுங்கேணி.
☎முல்லைசாலை, தருமபுரம். ☎முல்லைசாலை,ஒட்டுசுட்டான். ☎யாழ்.சாலை,மாங்குளம்.

**கிளிநகரின் மத்தியில்**
**(பழைய) அரசினர்**
**வைத்தியசாலையின் முன்பாக**

வெளிநாட்டிலுள்ள உங்களின்
உறவுகளிடமிருந்து தகவல்களை உங்கள்
வீட்டு வாசலுக்கே எடுத்துவர வன்னியன்
தொலைத்தொடர்பு நிலையங்களில்
**"எங்களுடன் இணைந்து கொள்ளுங்கள்"**
எனும் அட்டையைப் பெற்றுக் கொள்ளுங்கள்

(3283)

# சிறிலங்கா அரசியல் யாப்புக்கு...

அது தவறான ஊகம். நாங்கள் பல நாட்களுக்கு முன்பாகவே வாஷிங்டன் கூட்டத்தில், அதாவது ஜப்பான் மாநாட்டுக்கு முன்னோடியான ஆயத்தப்படுத்தல் கூட்டத்தில் விடுதலைப்புலிகள் புறக்கணிக்கப்பட்ட போது இதனை விளக்கியிருந்தோம். உண்மையிலேயே அப்படியான ஒருபுறக்கணிப்பு ஏற்பட்டு நெருக்கடி நிலைமைகள் உண்டாகியிருக்காவிட்டால் அன்றைய சீர் நிலையிலேயே இதனைக் கதைத்து தீர்வு கண்டிருக்க முடியும். அரச தரப்பால் ஏற்படுத்தப்பட்ட சில நடைமுறைச் சிக்கல்களால் தான் இக்கோரிக்கை காலதாமதமாகி தற்போது வந்துள்ளதே தவிர நீங்கள் குறிப்பிட்டது போன்ற ஊகம் தவறானது.

எம்மைப் பொறுத்த வரையில், அதனைப் புறக்கணிப்பது எமது நோக்கம் அல்ல. எங்களின் மக்களுக்கு நன்மையளிக்கக் கூடிய வகையில் எங்களின் பங்களிப்பு இருக்க வேண்டும் என்பது தான் எமது பிரச்சினை.

**கேள்வி: ஆரம்பகால பேச்சுவார்த்தையின் போது இடைக்கால நிர்வாகம் பெறுவது தொடர்பாக பேசப்பட்டு இடையில் கைவிடப்பட்டது. அப்படியான இடைக்கால நிர்வாகமாக இருந்தாலும் சரி நிதிப்பிரயோகத்தை பயன்படுத்துவது தொடர்பானாலும் சரி பாராளுமன்ற அங்கீகாரம் இன்றி எதனையும் செய்ய முடியாது. நீங்கள் தற்போது வைத்துள்ள கோரிக்கை சாத்தியமாகும் என்று நினைக்கின்றீர்களா?**

இடைக்கால நிர்வாகக் கோரிக்கை எம்மால் கைவிடப்பட்டது என்பது தவறான நிலைப்பாடு ஐக்கிய முன்னணி அரசாங்கம் பதவிக்கு வருவதற்கு முன்னரே ரணில்விக்கிரமசிங்க வெளிப்படையாகவே மக்களிடம் இந்த நிலைப்பாட்டை வைத்து வாக்குக் கேட்டார். பெரும்பாலான சிங்கள மக்கள் அதற்கு வாக்களித்தனர்.

இன்று இடைக்கால நிர்வாகத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதை இந்த நாட்டு மக்கள் தெளிவாக உணர்ந்துள்ளனர். ஆரம்பத்தில் பேச்சுக்களின் போது சில நெருக்கடி நிலைமைகள் தோன்றக் கூடாது என்பதற்காக நாங்கள் குறுகிய கால ஏற்பாடாக இரண்டு தரப்புகளும் இணைந்து சில அவசர புனர்வாழ்வு மனிதாபிமான பணிகளைச் செய்ய முடிவெடுத்தோம்.

அதாவது இந்த உபகுழு மிகவும் குறுகிய காலத்தில் மிகக் குறுகிய கால ஏற்பாடாக அமைக்கப்படுகிறது. எதிர்காலத்தில் ஏற்படப்போகும் நிர்வாக அலகிற்கு இது இடையூறாக அமையாது. அது மட்டுமன்றி எங்களது பணி அதற்கு மாற்றீடு செய்யப்படும் என்பது முதலிலேயே ஒழுங்குபடுத்தப்பட்ட விடயம்.

ஆனால், துரதிஸ்டவசமாக அந்த உபகுழுவே இயங்காத நிலையில் நாங்கள் இடைக்கால நிர்வாகத்தை வலியுறுத்த வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. முக்கியமாக ஜப்பானில் நடக்கும் இந்த மாநாடு பெருமளவு நிதிகளை இங்கே அபிவிருத்தி புனர்வாழ்வுப்பணிகளுக்கு அளிக்கப்போகிறது. அந்த நிதிகளை கையாள்வதற்கு அதிகாரம் மிக்க ஒரு ஒழுங்கமைப்பில்லாது நாங்கள் கலந்துகொள்ள முடியாது. அந்த நிலையில் நாங்கள் இதை வலியுறுத்த வேண்டியதும் தீர்மானங்களை நிறைவேற்ற வேண்டியதுமான நிர்ப்பந்தத்துக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.

ஆகவே இடைக்கால நிர்வாகத்தை நாங்கள் விடவில்லை. இலங்கை அரசியல் அமைப்புக்குட்பட்டு நடக்க வேண்டுமாக இருந்தால் எந்தக் காரியமும் நடைபெறாது. அதாவது யுத்த நிறுத்த உடன்படிக்கையோ, சமாதான முன்னெடுப்புகளையோ அனைத்தையும் இலங்கை அரசியல் அமைப்பு முற்றாக நிராகரித்த வடிவத்தை கொண்டுள்ளமையால் நாம் அரசியல் யாப்புக்கு வெளியில் நின்று தான் எதையும் செய்யவேண்டும் என்பதை அனைத்துத் தரப்புகளும் சிந்தித்தால் தான், தீர்வும் சமாதான நிலையும் சாத்தியப்படும்.

**கேள்வி : சர்வதேச சமூகம் ஜப்பான் மாநாட்டில் கலந்து கொள்ளுங்கள் என்று கூறுகின்றார்களே தவிர அவர்கள் இந்தப் பக்கத்தை எவ்வளவு உரக்க கதைக்கிறார்கள்? உரத்துச் சொல்லக்கூடிய வகையில் நீங்கள் எந்த நடவடிக்கைகளை எடுத்துள்ளீர்கள்?**

நாங்களும் எங்களுடைய நிலைப்பாட்டை சர்வதேச சமூகத்துக்கு வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறோம். இன்று தமிழ் அமைப்புகள், தமிழ் கூட்டமைப்பு, தமிழ் மக்கள் சார்பாக குரல் கொடுக்கக் கூடிய அனைத்து மக்களுமே இதை வலியுறுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

ஆகவே, சர்வதேச சமூகம் ஒரு மனிதாபிமான நோக்கத்தோடும் எமது மக்களுடைய நீண்டகால உரிமை மறுப்பினுடைய நெருக்கடிகளை விளங்கிக் கொண்டு எமது மக்களுக்கு நன்மையளிக்கக்கூடிய வகையில் சர்வதேச சமூகம் சிந்திப்பதற்கான காலம் போகவில்லை என்றுதான் நினைக்கின்றேன. அவர்கள் நிச்சயமாகப் புரிந்து கொள்வார்கள்.

**கேள்வி : டோக்கியோ மாநாட்டை ஒருபுறமாக வைத்துவிட்டு சமாதானப் பேச்சு வார்த்தைகளில் அரசியல் பேச்சுக்கள் தொடர்வது பற்றி உங்கள் கருத்து?**

நாங்கள் பிரதம மந்திரியிடம் எங்களுடைய பரிந்துரைகளையும், ஆலோசனைகளையும் தெரிவித்திருக்கின்றோம். ஆக்கபூர்வமான பதில்கள் கிடைக்கின்ற நிலையில் மீண்டும் அப்படியான சூழ்நிலையைப் பற்றி நாங்கள் நிச்சயமாக பரிசீலனைக்கு எடுத்துக் கொள்வோம்.

**கேள்வி : அரசு இவ்வாறு காலத்தை இழுத்தால் நீங்கள் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபடுவீர்களா?**

எங்களைப் பொறுத்த வரையில் யுத்தமூலம் தீர்வை எட்டுவதைவிட அமைதியான முறையில் பேசி இணக்கப்பாட்டுடன் ஒரு தீர்வை எட்டுவதைத் தான் தொடர்ந்தும் எமது தலைமை எதிர்பார்த்திருக்கிறது. அப்படியான ஒரு நிலைமையை தோற்றுவிக்க சிறிலங்கா அரசு தொடர்ந்து இழுத்தடிப்பு செய்யாது உறுதியான நிலைப்பாடுகளை எடுக்க வேண்டும் என்பது தான் இன்றைய எங்களது நிலைப்பாடு.

**கேள்வி: இலங்கையிலுள்ள அரசியல் யாப்புக்கு வெளியில் இடைக்கால நிர்வாகத்தை அரசு தருமா?**

இலங்கைத் தீவில் அமைதியும் சமாதானமும் சுமுகநிலைமையும் ஏற்படுத்த வேண்டுமாக இருந்தால் தமிழ் மக்கள் எவ்வளவு பாதிப்புக்குட்பட்டார்களோ, தமிழ் மக்கள் மீது எப்படியான ஒடுக்குமுறை ஏற்படுத்தப்பட்டதோ, நெருக்கடிகள் ஏற்படுத்தப்பட்டதோ அதற்கு தீர்வு காண்கின்ற ஏதோ ஒரு வழிமுறையைத் தேட வேண்டிய தேவை இருக்கிறது.

அதைவிட்டு விட்டு தமிழ் மக்களால் நிராகரிக்கப்பட்ட, அநீதி இழைக்கப்பட்ட ஓர் அரசியல் அமைப்பு வடிவத்துக்கு உட்பட்டு தீர்வை தேடினால் நிச்சயமாக தமிழ் மக்களுக்கு தீர்வே இல்லை. தமிழ் மக்களுக்கு ஒரு தீர்வு வேண்டுமானால் இடைக்கால ஏற்பாடாக இதற்கு வெளியில் நாம் சிந்தித்து இரண்டு தரப்பு ஏற்பாட்டுடன் ஒரு தீர்வை ஏற்படுத்துவது என்பது யதார்த்தமும் ஏற்புடையதுமாகும்.

**கேள்வி: அரசியல் சீர்திருத்தத்திற்கு புறம்பாக இப்படியான இடைக்கால அமைப்பை அமைக்க வேண்டும் என்று நீங்கள் கேட்கிறீர்களே. இலங்கையில் ரணில் விக்கிரமசிங்க அரசால் மட்டுமல்ல, ஜனநாயக ரீதியாக தெரிவுசெய்யப்பட்ட எந்த அரசானாலும் கூட இந்த ஏற்றுக் கொள்ளப்பட்ட அரசியல் அமைப்புக்குப் புறம்பாக இப்படி ஒரு அமைப்பை ஏற்படுத்தமுடியும் என நீங்கள் நினைக்கிறீர்களா?**

அதாவது இலங்கையினுடைய அரசியலமைப்பு முழுக்கமுழுக்கவே சிங்கள மொழி பேசுகின்ற பெரும்பான்மைப் பலம் கொண்ட ஒரு பாராளுமன்றத்தால்தான் உருவாக்கப்பட்டது. அதில் தமிழ்மக்களின் அங்கீகாரமோ பிரதிநிதித்துவமோ இருக்கவில்லை. இந்த அரசியலமைப்பு தமிழ் மக்களுக்கு அநீதி இழைக்கின்றது என்ற வகையில்தான் தமிழ் மக்கள் இந்த அரசியல் அமைப்பை நிராகரித்தனர். இந்த உரிமைப்போராட்டத்தை நீண்ட வருடமாக நடத்திக்கொண்டு வருகிறார்கள். அந்த அடிப்படையில் நிச்சயமாக அரசியல் அமைப்பில் ஏற்படுத்தப்பட்ட அநீதிகள் தமிழ்மக்களுக்கு ஏற்படுத்தப்பட்ட அநீதியான நிலைப்பாடுகள் மாற்றமடையும் வரை நிச்சயமாக தமிழ் மக்கள் அதற்கு இணங்கமாட்டார்கள் என்பது யதார்த்த பூர்வமானது.

ஆகவே இந்த நிலைப்பாட்டில் இருந்து நாம் வெளியில் சிந்திக்க வேண்டியதொரு தேவைப்பாடு இருந்தமையால்தான் இந்த சமாதான சூழ்நிலையை இரண்டு தரப்பும் சர்வதேச அனுசரணையுடன் ஏற்படுத்திக் கொண்டது. அதாவது யுத்தநிறுத்தம் பேச்சுவார்த்தை என்பன.

**கேள்வி: இங்கு அமைக்கப்பட்டுள்ள அமைப்புக்களுக்கு போதியபலம் இல்லை, காத்திரமான பலன் காணமுடியாது என்றால் நீங்கள் போதிய பலமுள்ளதாக தேர்தல் மூலம் வரலாமா?**

அதாவது இங்குள்ள கட்டமைப்புக்கள் உள்ளூராட்சிசபைகளாக இருக்கலாம். எந்த அதிகாரமும் அற்ற ஒரு அமைப்பாகவே தான் உள்ளது. அவை பாரியளவு நிதியை கையாளக்கூடிய தமிழ் மக்களின் புனர்வாழ்வு, புனர் நிர்மாணப்பணிகளை ஆற்றக்கூடிய அதிகாரமோ வலுவான கட்டமைப்போ எதுவும் இல்லை. ஆகவே அது சாத்தியப்படும் எனநாம் நம்பவில்லை. அதேவேளை,ஒரு தேர்தலில் இன்று அதிகாரத்தை கைபற்றுவதாக இருந்தால் இலங்கை அரசியல் அமைப்பு அதை ஏற்றுக் கொள்ளாது என்றுதான் நான் நினைக்கிறேன். ஏனென்றால் இலங்கை அரசியல் அமைப்பில் இன்னும் தமிழ் மக்களுக்கு இழைக்கப்படுகிற சரத்துகள் மிக இறுக்கமாக இன்னமும் இருக்கின்ற நிலையில் தமிழ் மக்களின் நன்மை கருதி ஓர் அரசியலமைப்பு வடிவம் இங்கு ஏற்படுகின்ற போது இங்கு ஏற்படும் ஒரு உறுதியான ஸ்திரமான அரசியல் தீர்வின் அடிப்படையில்தான் தேர்தலில் தமிழ் மக்கள் சார்பாக விடுலைப்புலிகள் பங்குபற்றும் சூழ்நிலை வருமே தவிர இப்படியான தேர்தல் இங்கு வரக்கூடிய சூழ்நிலையை நிச்சயமாக தோற்றுவிக்காது. தமிழ் மக்கள் எப்போதும் எந்தக் காலத்திலும் அங்கீகாரத்தை வழங்கமாட்டார்கள்.

இது தொடர்பாக மேலதிகமாகக் கூறுவது இன்னும் பொருத்தமானதாகும். தமிழ் மக்கள் ஒடுக்கு முறைக்களுக்கு உள்ளாகக்கப்பட்டு, தமிழ் மக்கள் மீது ஏவப்பட்ட யுத்தம் காரணமாக தமிழ் மக்கள் தமது சொந்த இருப்பிடத்தில் இருந்து இன்று பலலட்சம் மக்கள் இடம்பெயர்ந்த நிலையிலேயே வாழ்கின்றனர்.

அவர்கள் இங்கு ஒரு அரசியல் ஸ்திரத்தன்மையும் ஒரு அரசியல் உறுதிப்பாடும் அரசியல் தீர்வும் எட்டப்பட்டு சுமுகநிலை ஏற்படுத்தப்பட்டு அனைத்து மக்களும் பங்காற்றப்படும் நிலை ஏற்படுத்தப்பட்டால் தான் தேர்தல் அர்த்தமுள்ளதாக இருக்கும். இல்லாவிட்டால் அது போலியானதாகவே அமையும் என நாம் கருதுகிறோம்.

**கேள்வி: புலிகளின் பங்களிப்பின்றி டோக்கியோ மாநாடு இடம் பெறுமென கருதுகிறீர்களா?**

ஜப்பானில் நடைபெற உள்ள மாநாட்டில் நாங்கள் ஒரு சரியான உறுதிப்பாடான செய்தியை ஏற்படுத்துவதுதான் பொருத்தமானது என நினைக்கிறேன். இரண்டுதரப்பும் இணக்கப்பாடுகண்டு திருப்தி அடைந்து அதில் சரியான இணக்கப்பாட்டின் அடிப்படையிலும் ஒரு தீர்மானத்தின் அடிப்படையிலும். உண்மையின் அடிப்படையிலும் நாங்கள் இரண்டுதரப்பும் கலந்துகொள்ளும் பொழுதுதான் சர்வதேச சமூகம் சமாதானத்தின் மீதும் இங்கு முன்னெடுக்கப்படும் சமாதான முன்னெடுப்புக்கள் சம்பந்தமாகவும் நம்பிக்கை கொள்ளும் ஒருநிலையை உருவாக்கமுடியும்.

விடுதலைப்புலிகள் அதில் பங்குபற்றுவதற்கு சூழ்நிலை ஏற்படுத்தப்படாவிட்டால் தமிழ் மக்களின் இணக்கப்பாடு இன்றி தமிழ் மக்களின் நலன்களை முதன்மைப்படுத்துகின்றதோ அந்த தேவைகள் பூர்த்திசெய்யப்படவில்லை என்ற செய்தி தான் அந்த மாநாட்டில் நிச்சயமாக உருவாகும்.

எனவே சமாதான சூழ்நிலையையும் பேச்சுக்களையும் எமது மக்களின் நம்பிக்கையையும் கட்டியெழுப்பிக் கொண்டு போகவேண்டுமாயின் விடுதலைப்புலிகளையும் இணைத்து பங்களிப்பு செலுத்துவதுதான் பொருத்தமாக இருக்கும். அப்படியான சூழலை தோற்றுவித்துக்கொண்டு இலங்கை அரசாங்கம் போகின்றபோதுதான் சர்வதேசத்தின் கவனமும் ஈர்ப்பும் இலங்கைத்தீவுக்கு பெரும் பாலும் கிடைக்கும் இல்லாவிட்டால் சாதாரணமாக இலங்கை அரசுக்கு உதவிவழங்கும் மாநாடு போலவே இது நடைபெறும் என நான் கருதுகிறேன்.

**கேள்வி: ஏற்கனவே கப்பல் தாக்கப்பட்டபோது அதனை வெளிப்படுத்துவதற்காக பேச்சுக்களில் கலந்து கொள்வதாக அரசியல் ஆலோசகர் தெரிவித்தார். அதேபோல இந்த மேடையையும் நீங்கள் பயன்படுத்தி இந்தப் பிரச்சினையை உலகுக்கு வெளிப்படுத்த முடியாதா?**

இந்த மாநாடு மிகவும் வித்தியாசமாக நடைபெறுகிறது. இது பாதிக்கப்பட்டவர்களுக்கும் குறிப்பாக இலங்கைத்தீவில் வாழ்கின்ற மக்களின் புனர்வாழ்வுக்காக உதவி அளிக்கும் ஒரு மகாநாடு. ஆகவே அந்த மாநாடில் வைத்து எங்களது பிரச்சினைகளை கூறக்கூடிய நோக்கத்தோடு இந்த மாநாடு ஒழுங்கு படுத்தப்படவில்லை. அங்கே உதவிகளைக் கோருகின்ற மாநாடு. ஆகவே அந்த அடிப்படையில் நாங்கள் அதில் கலந்து கொள்வது என்பதில் தமிழ் மக்களுக்கு ஓர் அச்சம் உள்ளது. நீண்டகாலமாக நாங்கள் ஏமாற்றப்பட்டுள்ளோம். இப்படியான சமாதான அமைதிமுயற்சிகளை வெளி உலகிற்கு காட்டி இலங்கை அரசு முன்னைய காலங்களில் பெற்ற உதவிகள் தம்மை அழிப்பதற்கான யுத்தத்திற்கே பயன்படுத்தப்பட்டிருக்கின்ற அச்ச உணர்வு மக்கள் மத்தியில் உள்ளது.

ஆகவே நாம் எமது மக்கள் மத்தியில் உள்ள அச்சத்தை நீக்கி ஒரு உறுதிப்பாட்டை எடுத்துக்கொண்டு அங்கே போய் எமது மக்களின் பிரச்சினைகளை முன்வைப்பது தான் பொருத்தமானதும் சர்வதேச சமூகமும் ஏற்றுக்கொள்ளும் வகையிலும் அமையும்.

இந்த அடிப்படையில் அந்த அரங்கு இதற்குப் பொருத்தமில்லை என நான் நினைக்கின்றேன்.

**கேள்வி: டோக்கியோவில் தமிழ் மக்களின் மீள்குடியேற்றத்திற்கு அதிகபணம் வழங்கப்படவுள்ளது. நீங்கள் போகாவிட்டால் அப்பணம் கிடைக்காமல் போகும் என்பது பற்றி?**

நீங்கள் சொல்வது நியாயமானது. நிச்சயமாக தமிழ் மக்களுடைய அங்கீகரிக்கப்பட்ட ஒரு அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகளாக நாங்கள் போகின்ற பொழுது சர்வதேச சமூகம் அளிக்கின்ற இந்தப் பாரிய நிதியை கையாளக்கூடிய அதிகாரத்துடன் போக வேண்டும் என்பது தான் எங்களது நோக்கம். அப்படியான அதிகாரத்துடன் நாங்கள் போகின்ற பொழுது அந்த சர்வதேச சமூகத்தினுடைய எதிர்பார்ப்பையும் நாங்கள் நிறைவேற்றக்கூடியதாக இருக்கும் எங்களுடைய மக்களின் எதிர்பார்ப்புக்களையும் நாங்கள் நிறைவேற்றக் கூடியதாகவிருக்கும்.

ஆகவே எங்களுக்கும் நீங்கள் குறிப்பிட்டது போன்று அதுதான் பிரச்சினை. மில்லியன் கணக்கான உதவிகளை சர்வதேச சமூகம் செய்யப்போகின்றது. அதை நாங்கள் சரியான முறையில் பெறுவதற்கும் அதை எங்களுடைய மக்களுக்கு பிரயோகப்படுத்துவதற்கும் ஒருசரியான ஒழுங்கமைப்பும் ஏற்பாடும் இல்லாத ஒரு நெருக்கடி நிலைமைதான் எங்களுக்கும் ஏற்பட்டுள்ளது என்பதனை சகலரும் விளங்கிக்கொள்ள வேண்டும்.

மற்றொரு கேள்விக்குப் பதிலளிக்கையில்,

சமநிலை பேணுவது என்பது மக்கள் குடியிருப்புப் பகுதிகளை ஆக்கிரமித்து நிற்பதை வைத்துக்கொண்டு சமநிலையைப் பற்றி தீர்மானிக்க முடியாது. சமபலம் என்பது ஆயுத பலம் ஆளணி எண்ணிக்கை இவையெல்லாம் அதன் முக்கியமான பக்கங்கள். ஆகவே மக்கள் குடியிருப்பு பகுதிகளை ஆக்கிர மித்து வைத்துக் கொண்டு அதுதான் எங்கள் பலத்தினுடைய முதன்மையான விடயங்கள் அல்லது சமபலத்துக்கு அடிப்படையானது என்று கருதினால் இந்த யுத்த நிறுத்த உடன்படிக்கை கூட அர்த்தமற்றதாய் போய்விடும். ஏனெனில், இந்த யுத்த நிறுத்தத்தின் அடிப்படைக் கோட்பாடுகளாக இயல்பு நிலையை ஏற்படுத்துதல் மக்களை மீளக் குடியமர்த்துதல் அவர்களது வாழ்க்கை நிலையை சுமுக நிலைக்கு கொண்டு வருதல் என்ற அடிப்படை அதில் குறிப்பிட வேண்டிய தேவை ஏற்பட்டிருக்காது. ஆகவே, சமநிலைக்கும் இராணுவ இருப்புக்களை இடமாற்றிக் கொள்வதற்கும் எந்த விதத்தில் ஒப்பிட்டுப் பார்பதை நிச்சயமாக எவரும் ஏற்க மாட்டார்கள் என்றே நான் நினைக்கிறேன். கடந்த ஆறு சுற்று பேச்சுக்களில் பல இணக்கப்பாடுகளை, உறுதிமொழிகளை ஏற்படுத்திக் கொண்டாலும் அவை நடைமுறைப் படுத்தப்படவில்லை. அவை இன்று அர்த்தமற்றவையாகத்தான் இருக்கிறது.

எமது தலைமைப் பீடத்தின் எதிர்பார்ப்பையும் முடிவையும் தெளிவாக நாங்கள் பிரதமருக்கு அறிவித்துள்ளோம். அவர் அதற்கு எவ்வகையிலான முடிவை எடுப்பதன் ஊடாக நிச்சயமாக எங்கள் முடிவுகளிலும் மாற்றம் வரும். அது பரிசீலனைக்கும் உட்படுத்தப்படும்.

இறுதியாக நடந்த பேச்சுக்களின் போது திருகோணமலையிலே ஏற்படுத்தப்பட்டுக் கொண்டிருந்த குடியேற்றங்கள் சம்பந்தமாகவும் முயற்சிகள் சம்பந்தமாகவும் எங்களுடைய ஆட்சேபத்தை, எமது இறுக்கமான கடுமையான நிலைப்பாட்டை நாங்கள் தெரியப்படுத்தியுள்ளோம். அதில் அரச தரப்பு எமக்கு உத்தரவாதம் தந்துள்ளது. அதாவது புதிய குடியேற்றங்கள் அரசியல் உறுதிப்பாடு அரசியல் தீர்வு முழுமையடையாது ஏற்படுத்தப்படமாட்டாது என உறுதி கூறியுள்ளார் என்றார்.

# அல்ஜீரியாவில் மோசமான பூகம்பம்

## 700க்கு மேற்பட்டோர் பலி; 5000 பேர் காயம்!

அல்ஜீரியாவில் நேற்று முன்தினம் ஏற்பட்ட மிகவும் மோசமான பூமி அதிர்ச்சி காரணமாக இதுவரை 700 க்கு மேற்பட்டோர்



உயிரிழந்துள்ளதுடன் 5000 க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

6.7 ரிக்கர் அளவில் இருந்த இப் பூமி அதிர்வு ஏற்பட்டதாகவும் இதனால் பல கட்டடங்கள் முற்றிலுமாக உருக்குலைந்து விட்டதாகவும் இதனால் பலர் குடும்பம் குடும்பமாக புதையுண்டு போனதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நில நடுக்க பாதிப்பை சமாளிக்க முடியாது மருந்துவமனைகள் இப்போதும் திணறிக்கொண்டிருப்பதாக இந்த நில நடுக்கம் ஒரு தேசிய பேரழிவு சம்பவம் என அல்ஜீரியப் பிரதமர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அல்ஜீரியாவில் நேற்று முன்தினம் ஏற்பட்ட பூமி அதிர்ச்சி கடந்த பத்து வருடங்களில் ஏற்பட்ட 17 ஆவது பூமி அதிர்ச்சியாகும்.

கடந்த பத்து வருடங்களில் ஏற்பட்ட பூமி அதிர்ச்சியில் அதிகமானோர் இந்தியாவிலேயே உயிர் இழந்துள்ளனர்.

இந்தியாவில் 1993ஆம் ஆண்டும் 2001 ஆம் ஆண்டும் இரண்டு பாரிய பூமி அதிர்ச்சிகள் இடம் பெற்றுள்ளன.

1993ஆம் ஆண்டு மேற்கு மற்றும் தென் இந்தியாவில் 6.4 ரிக்டர் அளவில் ஏற்பட்ட பூமி அதிர்ச்சி காரணமாக சுமார் 10,000 பேர் உயிரிழந்துள்ளனர்.

2001 ஆம் ஆண்டு குஜராத்தில் 7.7 ரிக்டர் அளவில் பூமி அதிர்ச்சி ஏற்பட்டதாகவும் இதில் 19,700 பேர் உயிரிழந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# க.பொ.த. (உ/த) பரீட்சை மே 31, ஜூன் 01 நடைபெறும்

வெள்ளத்தின் காரணமாக பிற்போடப்பட்ட க.பொ.த உயர் தரப்பரீட்சையின் வினாத்தாள்கள் மீண்டும் நடைபெறும் திகதி பற்றி பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

மே மாதம் 19, 20 ஆம் திகதிகளில் நடைபெறவிருந்த பரீட்சைகள் மே மாதம் 31 ஆம் திகதியும் ஜூன் 01 ஆம் திகதியும் நடைபெறும் என பரீட்சை ஆணையாளர் நாயகம் அறிவித்துள்ளார்.

கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்குடன் நடத்திய கலந்துரையாடலின் பின்னர் இத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஏற்கனவே விநியோகிக்கப்பட்ட அனுமதிப்பத்திரங்கள் அன்றைய தினத்தில் செல்லுபடியாகும். ஒரு பரீட்சார்த்தி தனக்கு அளிக்கப்பட்ட பரீட்சை நிலையத்தில் தோற்ற முடியாத நிலை இருக்குமானால் அருகிலுள்ள வேறு நிலையத்தில் பரீட்சைக்குத் தோற்றலாம் என ஆணையாளர் நாயகம் விஜயசிறி தெரிவித்துள்ளார்.

பரீட்சைகளை ஒருங்கிணைக்கும் நிலையங்கள் எதிர்வரும் 31 ஆம் திகதி 7.00 மணிக்கு திறக்கப்பட வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

## வாகனம் அன்பளிப்பு

யுனிசெவ் நிறுவனத்தால் முல்லை அரச அதிபருக்கென நீர்கொள்கலன் வாகனம் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது.

இதன் முதற்கட்டமாக முல்லைத்தீவு புனித பேதுரு வானவர் ஆலயத்தில் நடைபெற்ற குருத்துவ திருநிலைப் படுத்தல் விழாவுக்கு தனது சேவையைச் செய்தமை குறிப்பிடத்தக்கது. (20)

## -அபிவிருத்தி லொத்தர் சபை விவகாரம்-

# சனாதிபதியின் உத்தரவைப் புறக்கணிக்கும் அதிகாரிகளை பதவி நீக்க வேண்டும்

### - பொ.ஐ.முன்னணி பா.உறுப்பினர் குழு கோரிக்கை

(கொழும்பு)

அபிவிருத்தி லொத்தர் சபையை சுவீகரிக்கும் சனாதிபதியின் முடிவுக்கேற்ப கடமை புரியாத அதிகாரிகளை பதவி நீக்கம் செய்யுமாறு பொ.ஐ.மு. அரசின் எம்.பி.க்கள் சிலர் சனாதிபதியிடம் கோரியுள்ளனர்.

கடந்த 20ஆம் திகதி எதிர்க் கட்சித் தலைவர் மகிந்த ராஜ பக்ஷ தலைமையில் கூடிய பொதுசன ஐக்கிய முன்னணி பாராளுமன்ற உறுப்பினர்கள் குழு சனாதிபதியின் இம்முடிவை தாம் ஆதரிப்பதாகவும் இலாபமீட்டும் நிறுவனங்களை தனியார் துறைக்கு ஒப்படைக்க அரசு முயற்சி செய்தால் அதனை சனாதிபதி பொறுப்பேற்க வேண் டும் எனவும் தீர்மானத்துள்ளது.

மேலும் சனாதிபதியின் உத்தரவைப் புறக்கணிக்கும் எந்த அதிகாரியையும் சனாதிபதி பதவி நீக்கம் செய்ய வேண்டும் எனவும் கோரியுள்ளனர்.

## ஐ.நா.குழு...

ஐக்கிய நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் அடங்கிய 3 குழுக்கள் ஏற்கனவே பாதிக்கப்பட்ட 05 மாவட்டங்களுக்கும் விஜயம் செய்து மதிப்பீட்டு அறிக்கையினைத் தயாரித்துள்ளனர்.

## உள்ளூராட்சித்...

தலையும் அவசரமானவையு மான சூழ்நிலையின் நிமித்தம் பிற் போடப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. அது குறித்து ஜே.வி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் குணவர்த்தன சபையில் ஆட்சேபனை தெரிவித்தபோதே மேற்படி அறிவிப்பு வெளியாகியுள்ளது.

## ஐரோ.ஆணைக்குழு...

களை நடத்தவுள்ளார்.

டோக்கியோவில் நடைபெறவுள்ள நிதி வழங்கும் மாநாட்டில் இவர் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நிந்தவூரில் புலிகள்...

எமது இயக்கப் போராளியான பூவண்ணன் என்று அழைப்படும் காத்தமுத்து கோணேஸ்வரன் அவர்களின் திட்டமிட்ட கொலைச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

காரைதீவில் வைத்து ஈ.பி.டி.பி கும்பலினால் கடத்திச் செல்லப்பட்ட பூவண்ணன் கொலை செய்யப்பட்டு அவரது சடலம் முஸ்லிம் கிராமங்களில் ஒன்றான நிந்தவூரில் போடப்பட்டுள்ளமையானது தமிழ் முஸ்லிம் மக்கள் மத்தியில் குரோதத்தை தோற்றுவித்து இரு சமூகங்களுக்கும் இடையே இன மோதலை ஏற்படுத்தி வேடிக்கை பார்க்கும் நோக்கில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாறான தீய சக்திகளிடம் இருந்து தமிழ் முஸ்லிம் மக்களை விழிப்பாக இருக்குமாறு வேண்டிக்கொள்ளும் அதேவேளை, மீண்டும் இவ்வாறான செயல்கள் தொடருமானால் மிகவும் பாரதுாரமான நடவடிக்கைகள் எம்மால் மேற்கொள்ளப்படும் என்பதையும் வலியுறுத்துகின்றோம் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஜப்பான் மாநாட்டில்...

கான சந்திப்பாக நாம் இதனைக் கருதுகின்றோம்.

ஜப்பானில் உதவி வழங்கும் மாநாடு சம்பந்தமாக இன்று முதன்மையாக விவாதிக்கப்படுகின்றது. இந்த மாநாட்டிற்கு விடுதலைப்புலிகள் கலந்துகொள்ளச் செய்வதற்கு பல வழிகளிலும் முயற்சி எடுப்பதை நாங்கள் பாராட்டுகின்றோம்.

அதேவேளை, ஜப்பான் மாநாட்டுக்கு தமிழ்மக்களின் பிரதிநிதிகளாகக் கலந்து கொள்வதற்கு விடுதலைப்புலிகளுக்கு அதற்கேற்ப அங்கீகாரமும் அதில் நாம் கலந்து கொள்வதற்கான சூழ்நிலையையும் ஏற்படுத்த வேண்டும் என்பதும் ஒரு அவசியமான பிரச்சினையாக உள்ளது.

இந்த நிலையில், இன்று ஏற்பட்டுள்ள இந்த சமாதான முன்னெடுப்புகளுக்கான ஒரு முடக்க நிலையில் ஏற்பட்டிருக்கின்ற நம்பிக்கையீனங்கள் அகற்றப்பட்டு பாதிக்கப்பட்ட எமது மக்களுக்கு நன்மையளிக்கக்கூடிய வகையில் சமாதான முன்னெடுப்புக்களை உறுதியாக முன்னெடுத்துச் செல்வதற்கு எமது தலைமை மிகுந்த ஆர்வத்துடன் இருக்கிறது.

அந்த அடிப்படையிலேயே ஜப்பானின் விசேட தூதுவரையும் நோர்வேயின் வெளிவிவகார அமைச்சரையும் எமது தேசியத்தலைவர் அவர்கள் சந்தித்து அண்மைக்கால சமாதான சூழலின் முடக்க நிலைக்கு காரணமான பக்கங்களையும் எதிர்காலத்தில் நாங்கள் இதை உறுதியாக முன்னெடுத்து செல்வதற்கு ஆற்றக்கூடிய பங்குகள், செயற்படுத்த வேண்டிய செயற்பாடுகள் சம்பந்தமாக எமது தரப்பு ஆலோசனைகளையும் பரிந்துரைகளையும் விளக்கியிருந்தார்.

முக்கியமாக இராணுவ நெருக்குவாரங்களைத் தவிர்த்து மக்களைத் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்தி இயல்பு நிலையைக் கொண்டு வருவதும், இந்தப் பேச்சுவார்த்தையின் ஆரம்பப்பகுதியில் நாங்கள் அவசர மனிதாபிமான புனர்வாழ்வுப் பணிகளை மேற்கொள்வதற்காக ஒரு உபகுழுவை ஏற்படுத்தியதையும் அறிவீர்கள். இந்த அமைப்பு உண்மையிலேயே என்ன நோக்கத்தோடு உருவாக்கப்பட்டது என்றால் மிகக் குறுகிய கால ஏற்பாடாக எமதுமக்களின் அவசர மனிதாபிமான புனர்வாழ்வுப் பணிகளை உடனடியாக மேற்கொள்ளும் நோக்கோடு இரண்டு தரப்பினதும் பங்களிப்புடன் உருவாக்கப்பட்டது.

இந்த அமைப்பு சரியாகச் செயற்பட முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்ட தன் காரணமாக நாங்கள் நான்கு முறை கூடி ஆராய்ந்து முடிவுகளை எடுத்தாலும் அவை நடை முறைப்படுத்தப்படாமல் போனது. இதனால் மக்கள் மத்தியில் நம்பிக்கை இழந்த ஒருநிலைக்கு இந்தஅமைப்பு தள்ளப்பட்டுள்ளது.

இந்த அவசர தேவையை உணர்ந்து சர்வதேச சமூகம் இந்த அமைப்புக்களூடாக பல உதவிகளைச் செய்ய முன்வந்தது ஏற்கனவே அனைவரும் அறிந்ததே. அதனால் ஒஸ்லோவில் நடைபெற்ற அவசர மனிதாபிமான தேவைகளுக்கான உதவி பெறும் ஒரு மாநாடு ஒழுங்குபடுத்தப்பட்டது. அதில் பலநாடுகள் எமது மக்களின் அவசர மனிதாபிமானப் பணிகளுக்குத் தங்களின் உதவிகளை வழங்குவதற்கு முன்வந்தன. அப்பொருளாதார உதவிகளை சரியாகப்பெற்று நடைமுறைப்படுத்த முடியாமல் போனதற்கு இந்த அமைப்பின் செயற்திறன் அற்றதும் செயற்பாட்டுத்திறன் அற்றதுமான தன்மையே காரணமாக அமைந்துள்ளது.

இந்த நிலையில் புதிய ஏற்பாடுகளைப் பற்றிச் சிந்திக்க வேண்டிய நிர்ப்பந்தம் தமிழ்மக்கள் சார்பாக எமக்கு ஏற்பட்டுள்ளது.

ஏனெனில் பாதிக்கப்பட்டவர்கள் என்ற வகையிலும் நீண்ட யுத்தத்துக்கு முகம் கொடுத்து எமது அடிப்படை கட்டுமானங்களை முற்றாக இழந்து பாரிய மனிதாபிமான வாழ்வியல் நெருக்கடிகளுக்கு உட்பட்டிருக்கின்ற மக்கள் என்ற வகையிலும் எமது மக்களுக்கு நிவாரண உதவிகளும் ஒரு நிரந்தரமான தீர்வும் தேவைப்படுகிறது.

ஆகவே இந்தச் சூழ்நிலையில் எமது மக்கள் சார்பாக துரித நிலைப்பாடுகளையும், துரித மாற்றங்களையும், நடைமுறைச் சாத்தியமான தீர்மானங்களையும், முடிவுகளையும் எடுத்து நாங்கள் இந்த சமாதான முன்னெடுப்புகளை முன்னெடுத்துச்செல்ல வேண்டும் என்பதே எமது தலைமையினுடைய விருப்பமாக இருந்தது. அந்த அடிப்படையிலேயே எமது பரிந்துரைகளையும் ஆலோசனைகளையும் நாங்கள் வெளிப்படுத்தியுள்ளோம்.

சர்வதேச சமூகம் இன்று இரண்டு தரப்பினதும் இணக்கப்பாடுகள், உறுதிப் பாடுகளின் மத்தியில் இந்த சமாதான முன்னெடுப்புகள் வெற்றிகரமாக முன்னெடுத் துச்செல்லப்பட வேண்டும் என்பதில் மிகுந்த ஆர்வமும் அக்கறையும் கொண்டிருக்கிறது என்பதை நாம் பாராட்டும் அதேவேளை, எமது புதிய நடைமுறைச்சாத்தியமான பரிந்துரைகளை நடைமுறைப் படுத்துவதற்கும் சர்வதேச சமூகம் உறுதுணை புரிய முன்வர வேண்டும் என்பதுதான் இன்று எமது எதிர்பார்ப்பு.

ஜப்பானில் நடைபெற இருக்கின்ற பாரிய பொருளாதார உதவி வழங்கும் மாநாட்டில், யுத்தத்தால் சிதைந்து போயுள்ள இந்த வடக்குக் கிழக்கு பிரதேசங்களை மீளக்கட்டி எழுப்புவதற்கும் எமது மக்களின் வாழ்வு நிலையை சீர்படுத்துவதற்கும் சர்வதேச சமூகம் செய்கின்ற இந்த உதவிகளைச் சரியான முறையில் எமது மக்களின் நன்மைகளுக்கும் தேவைகளுக்கும் கொண்டு செலுத்தக்கூடியதான ஒரு அதிகாரமுள்ள - அதாவது முடிவெடுத்து நடைமுறைப்படுத்தும் அதிகாரமுள்ள ஓர் இடைக்கால ஏற்பாடுள்ள ஓர் இடைக்கால நிர்வாகத்தை ஏற்படுத்துவது சாலப்பொருத்தமானது என்ற நிலைப்பாடு எமது மக்கள் மனதிலும் ஏற்பட்டுள்ளது.

அந்த அடிப்படையிலேயே எமது தலைமை இந்த பரிந்துரையையும் ஆலோசனையையும் அரசாங்கத்திடம் அறிவித்துள்ளது. பிரதமரிடமிருந்து ஒரு ஆக்கபூர்வமான, தீர்க்கமான பதிலை எதிர் பார்த்திருக்கிறோம் என நேற்று கிளிநொச்சியிலுள்ள விடுதலைப் புலிகளின் சமாதான செயலகத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப் பில் உரை நிகழ்த்திய தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்கள் தெரிவித்தார். (சோ,லோ)

## தேடுகிறார்கள்



சில்லிக்கொடி ஆறு கொக்கட்டிச்சோலை மட்டக்களப்பைச் சேர்ந்த ஞானமுத்து மயில்வாகனம் என்பவரை 14.03.2003 அன்று தொடக்கம் காணவில்லை இவரை ஞானமுத்து குணமணி தாயார் தேடுகிறார். இவர் எங்கிருந்தாலும் ஞானமுத்து தங்கராசா, தமையனிடம் தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும் 067-50661 அல்லது கிளிநொச்சி ஈழநாதத்தில் தொடர்பு கொள்ளவும்.

தகவல்: ஞானமுத்து குணமணி. (தாயார்)

(3282)




இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ஆம் ஆண்டு மே மாதம் 23ஆம் திகதி அச்சிட்டு ...